# புலியைக் கண்டு ஓட்டம்.

*மூலம்:* மௌலானா மௌலவி மீரட் முஹம்மது அப்துல் அலீம் ஸித்தீக்கி காதிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்

*தமிழில் விளக்கக் குறிப்புகளுடன்:* அஷ்ஷாஹ் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி, ஸித்தீக்கி, காதிரி காஹிரி, கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்

தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் குரு அஷ்றபு அலி தானவி பற்றி மௌலானா மௌலவி மீரட் முஹம்மது அப்துல் அலீம் ஸித்தீக்கி காதிரி கத்தஸல்லாஹு ஸிர்ர{ஹல் அஜீஸ் அவர்களின் (பத்வா) தீர்ப்பை உருதுவிலிருந்து மொழி பெயர்த்து, குறிப்புகளும் எழுதியவர்கள் காயல்பட்டணம் மௌலானா மௌலவி அல்ஹாஜ்,அஷ்ஷெய்குல் காமில்,அஷ்ஷாஹ் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி, ஸித்தீக்கி, காதிரி காஹிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள்.

**குறிப்பு**: உருது மூலத்தை கருப்பு எழுத்துக்களிலும், விளக்க குறிப்புகளை சரிவான வைலட் கலர் எழுத்துக்களிலும் மக்கள் விளங்கும் வண்ணம் அச்சிடப்பட்டுள்ளது.

வெளியீடு:-

**ஹிஸ்புல்லாஹ் சபை,**

**ஸூபி மன்ஸில்,**

93 A, குத்துக்கல் தெரு, காயல் பட்டினம்-628204.

## புலியைக் கண்டு வெருண்டோடின!

سلاما قالوا الجهلون خاطبهم و اذا

மௌலவி அஷ்றபு அலி தானவியும் அவரின் கொள்கைக்காரச் சகாக்களும் எப்பொழுதும் அல்லாஹுத்த ஆலா உடைய விஷயத்திலும், அவனது திருத்தூதர் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைய விஷயத்திலும் குறைபாடுகளும், அவதூறுகளும் சொல்வதிலேயே திருப்தியுடையவர்களாக இருக்கிறார்கள். இதனாலேயே ஹஜ்ரத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மெய்யன்பர் (ஆஷிகீன்) களின் பேரில் இவர்கள் எந்தவிதமான இழிவுடைய வார்த்தைகளைச் சொன்ன போதிலும்,

'அந்த நல்லடியார்களுடன் அறிவிலிகள் (மடத்தனமாகவும், அவமரியாதையாகவும்) உரையாடுவார்களேயானால் அவர்கள் சமாதானமாகவும், சாந்தியாகவும் உரையாடுவார்கள்'

-அல்-குர்ஆன் 25:63

என்ற திருவசனப் பிரகாரமே மறுமொழி கொடுக்கப்படுகிறது. மேலும், எவர்களுடைய நாவெனும் ஈட்டியை விட்டும் அல்லாஹ்வும், ரஸூலும் தப்பித்துக் கொள்ளவில்லையோ அவர்களிடம் நாம் எந்த அளவிலானவர்கள் என்பதையும் யோசனை செய்யப்படுகிறது.

இமாம் ஷாபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்கிறார்கள்.

اَللهُ وَالرَّسُوْلُ مَعًا مِنْ لِسَانِ الْوَرٰي فَكَيْفَ مَا نَجٰي

'ஜனங்களின் நாவை விட்டும் அல்லாஹ்வும் ரஸூலும் தப்பித்துக் கொள்ளாமலிருக்கும் போது நான் எப்படி (தப்ப முடியும்)?

இயற்கைச் சுபாவமாகிறது:

چون خواهد که پرده کس درد
میلش اندر طعنهٔ پاکان برد

'அல்லாஹுதஆலா ஒருவருடைய திரையைக் கிழிக்க (அதாவது அவனை மானபங்கப்படுத்த) நாடினால் நல்லடியார்களை குறைபாடு சொல்வதளவில் அவனின் கவனத்தைத் திருப்புவான்.'

முடிவாக (இவர்கள் நல்லடியார்களைக் குறைவாகப் பேசியதற்காக) ,வர்களை மானபங்கப்படுத்தும் விதம் எவ்வாறானதென்றால், அல்லாஹ்வின் சமூகத்திலிருந்தும் முஸ்தபா ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களுடைய தர்பாரிலிருந்தும், மகத்துவ மிக்க மகான்களான முப்திகள், உலமாக்களில் முப்பத்து மூன்று பேர்களிடமிருந்து தகுந்த ஆதார ருசுக்களுடன் இந்தக் கூட்டத்தார்கள் பேரில் குப்ரு பத்வா ஹுஸாமுல் ஹறமைன் என்னும் பெயருடன் வந்தது. இச்சேதி இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் பிரஸ்தாப(பிரபல)மானது. (அஷ்றபு அலி தானவி உடைய) பழைய அபிமானிகள் அவருக்கு ஹகீமுல் உம்மத் என்ற பட்டத்தைச் சூட்டி அவருக்கு ஊக்கமூட்டினார்கள். அதன் பலாபலன் என்னவாயிற்றென்றால் அந்தக் கூட்டத்தார்கள் (அறியாமையில்) இன்னும் ஒரு படி மேலே ஏறி ரஸூலுத்துவத்தை (தூதுத்துவத்தை) தாவாச் செய்யவும் நேர்ந்தது. ஆகவே, (அஷ்றபு அலி தானவியுடைய பிறப்பிடமான) தானாபூனில் வெளியாகும் '**அல்இம்தாது**' எனும் மாதப் பத்திரிகையில், ஹிஜ்ரி 1336 ஸபர் மாத இதழ் 35வது பக்கத்தில் அந்த அவர்களின் ரஸூலுத்துவத் (தூதுத்துவ) தாவாவைப் பின்வருமாறு வெளிப்படுத்தப்பட்டது.

لَا اِلٰهَ اِلَّا اللهُ اَشْرَفُ عَلِيٌ رَسُوْلُ اللهِ    اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا وَنَبِيِّنَا وَمَوْلَانَا اَشْرَفُ عَلِيٍ

**'லா இலாஹ இல்லல்லாஹு அஷ்றபு அலி ரஸூலுல்லாஹ்- அல்லாஹும்ம ஸல்லி அலா ஸெய்யிதினா வ நபிய்யினா வ மவ்லானா அஷ்றபு அலி'** என்று ஒரு முரீது ஓதுகிறார்.1 (நஊதுபில்லாஹி) அதற்கு உத்தாரமாக அவருடைய ஷெய்கு (அஷ்றபு அலி) தானவி அவர்கள், **'இந்தச் சம்பவத்தில் சாந்தி இருக்கிறது. அதாவது, எவர் பக்கம் நீவிர் மீளுகிறீரோ அவர் (தானவி) அல்லாஹ் உதவியால் மார்க்கத்தைத் தொடர்ந்தவராகும்'** என்ற இந்த வாசகத்தோடு முடித்துக்கொள்கிறார்.

1அஷ்றபு அலி தானவியுடைய முரீதுகளிலொருவர் தன்னுடைய கனவிலும் விழிப்பிலும் பல முறைகளாக இவ்வாறு ஓத ஏற்பட்ட இச்சம்பவத்தை தனது குருவான அஷ்றபு அலியிடம் தெரிவித்தாராம்.

இஸ்லாமியச் சகோதரர்களே!

இந்த அபாயகரமான வாசகப் போக்கை நீங்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். நபித்துவத்தில் ஷிர்க்கு வைப்பதைத் தடுக்க வேண்டியதற்குப் பகரமாக மார்க்கத்தைத் தொடருதல் என்று பிரஸ்தாபிக்கப்படுகிறது. எம்பெருமானார் ரஸூலுல்லாஹி ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவம் தானாபூன் பக்கம் திரும்பி விட்டதாகத் தரிபடுத்தப்படுகிறது. இந்த ஆச்சரிய விசித்திரப் புகழ் வாசகத்தை நன்கு பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

அலி (ரலியல்லா{ஹ அன்ஹு) அவர்களைக் கொண்டாடும் ஷியா வகுப்பார்களையும் விட இவர்கள் மேலே போய்விட்டார்கள். அவர்கள் கலிமாவில்

عَلِيٌّ وَصِيُّ رَسُوْلِ اللهِ

'அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லா{ஹ அலைஹிவஸல்லம் அவர்களால் வஸியத்து செய்யப் பட்டார்கள்' என்ற வசனத்தைத் தான் அதிகப்படுத்தினார்கள். ஆனால், இவர்களோ ரஸூலுத்துவத்தையே கைப்பற்றிக் கொண்டார்கள். இனி செல்லச் செல்ல என்ன ஆகுமோ! (அவர்களின் அந்தப் பத்திரிகையின்) அடுத்து இதழில் உலூஹிய்யத் (தெய்வீகத்)தைத் தாவாப் பண்ணுவதாகக் கூட வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

غَلّهْ چُوْنْ اَرْزَانْ شَوَدْ اِمْسَالْ مَیْدِیْ شَوَدْ

'தானியம் விலை மலிந்து இவ்வருஷமே (உழுத்து) கெட்டு மாவாகவும் ஆகிவிட்டது.'

www.sufimanzil.org

**உண்மையை ருசுப்பித்தல் (உறுதிப் படுத்துதல்):**

மீரட்டுப் பூமியின் துர்பாக்கியம் இப்பொழுது அந்த ரஸூலுத்துவத் தாவாக்காரர் இங்கு வந்திருக்கிறார். மதீனா நகர அதிபதி எஜமான் நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி; வஸல்லம் அவர்களின் அடிமைகளான நாம் நம் எஜமானவர்களின்

بَلِّغُوْا عَنِّيْ وَلَوْ بِحَرْفٍ

'நீங்கள் என்னிடமிருந்து ஒரு அட்சரத்தைத் தெரிந்திருந்தாலும் அதையும் (பிறருக்கு) எத்தி வையுங்கள்' என்ற பொன் மொழியைத் தெரிந்திருக்கிறோம். விண்ணுலக ஓசை (திருமறை மொழி) யும்

وَمَنْ يَّكْتُمْهَا فَاِنَّهُ اٰثِمٌ قَلْبُهُ

எவன் அதை மறைப்பானோ அவனுடைய இருதயம் குற்றம் புரிந்ததாகும்'

-அல்-குர்ஆன்2:283

என்று வந்திருக்கிறது. ஆகையால்,

لَا نَبِيَّ بَعْدِيْ

'எனக்குப் பின்பு நபி இல்லை' என்ற பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அறிக்கையை நாம் எத்திவைக்க வேண்டும். அதாவது முஹம்மது ரஸூலுல்லாஹி; ஸல்லல்லா{ஹ அலைஹி; வஸல்லம் அவர்களுக்குப் பின்பு எவருக்கும் நுபுவ்வத்துக் கொடுக்கப்பட மாட்டாது என்பதையும், அவர்களே இறுதி நபி என்பதையும் எத்தச் செய்து பிரச்சாரம் பண்ணுவது ஒவ்வொரு உண்மை முஸ்லிமுடைய கடமையாகும். இதே நோக்கத்திலேயே ஹிஜ்ரி 1336 ஜமாதுல் அவ்வல் மூன்றாம் தேதி மீரட்டு மாநகரின் ஜும்ஆப் பள்ளியில் பின்வரும் அறிக்கை விடப்பட்டது. அதாவது:

'மௌலவி அஷறபு அலி சாஹிபு அவர்கள், தான் ரஸூல் என்பதற்கு ஆதாரம் வைத்திருந்தால் அதை ஆஜர்படுத்தவும்.'

قُلْ هَاتُوْا بُرْهَانَكُمْ اِنْ كُنْتُمْ صَادِقِيْنَ

'நீங்கள் உண்மையாளர்களாயின் (உங்கள் கூற்றுக்கு) ஆதாரத்தைச் சமர்ப்பியுங்கள்' -அல்-குர்ஆன்2:111

என்று முப்பது மணி நேர அவகாசமும் கொடுக்கப்பட்டது.

**மௌட்டீக இறுமாப்பு ஓசை:**

கடைசியில் நன்னம்பிக்கையுடைய நண்பர்களில் சிலர் (இந்த) ரஸூலுத்துவத் தாவாவை(தூதுத்துவ வாதத்தை) விட்டும் மீளுவதற்காக அல்லது அந்தத் தாவா அளவில் இழுத்துச் செல்லும்படியான அவரின் வார்த்தைகளுக்கு (தாவீல்) வலிந்துரையாகிலும் விபரித்துக் காட்ட வேண்டுமென்ற கருத்தோடு, ஹிஜ்ரி 1336 ஜமாதுல் அவ்வல் ஐந்தாம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸுப்ஹில், மெயின் பஜார், ஜும்ஆப் பள்ளியில் வஃளு (உபதேசம்) சொல்லும் போது மேற்படி மவுலவி சாஹிபு அவர்களை நிர்ப்பந்தப் படுத்தினார்கள். ஆனால், அந்தத் தானவி மௌலவி ஷெய்கு சாஹிபு, அந்த ரஸூலுத்துவத் தாவா (தூதுத்துவ வாதம்) சரியில்லை, அது தவறானது என்று சொல்லவுமில்லை, அந்தக் குப்ரிய்யத்தை விட்டு மீளவுமில்லை.

**தானவி ரஸூலின் லட்சணம்:**

வஃளு (உபதேசம்) முடிந்த பின்னர் பகிரங்கக் கடிதம் மூலம் அவருடயை சமூகத்தில், ' மீலாதுந் நபி கூட்டம் சம்பந்தமாகவும், ரஸூலுல்லாஹி ஸல்லல்லா{ஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மறைவான சங்கதிகளைப் பற்றிய (இல்முல் கைபு) அறிவு சம்பந்தமாகவும், இன்னமும் வேறு பல அவரது பொய்க் கற்பனை மஸ்அலாக்கள் விஷயமாகவும், குறிப்பாக அவருடைய இந்த ரஸூலுத்துவத் தாவா (தூதுத்துவ வாதம்) சம்பந்தமாகவும் உண்மையை விளக்கிக் கூறும் படியும்' அழைப்புக் கொடுக்கப்பட்டது. அங்கு சமூகமளித்த சகோதரர்கள் அறிவிக்கிறர்கள்: மேற்படி பொதுச் சபையில் இந்த பகிரங்கக் கடிதத்தைப் பார்த்ததும் தானவி ரஸூல் கோபங் கொண்டு, '**நான் உங்கள் தகப்பனாரின் வேலைக்காரனல்ல**'' என்று சொல்லிக் கொண்டு அவரும், அவருடைய சகாக்களும் அவசரமாகக் கிளம்பி விட்டார்கள்.

فَرَّتْ مِن قَسْوَرَةٍ بَلْ يُرِيدُ كُلُّ امْرِئٍ مِّنْهُمْ أَن يُؤْتَىٰ صُحُفًا مُّنَشَّرَةً

'புலி(யின் சப்தத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே அதன்) இடமிருந்து (கழுதைகள் எல்லாம்) ஓடி விட்டன என்கிலும், அவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்கு ஒரு வேதத்தைக் கொடுக்கப்பட வேண்டுமென்று நாடுகிறார்கள். அது சாத்தியமல்ல.'

-அல்-குர்ஆன் 74:52

**ஆதாரப் பூர்த்தி:**

அதன் பின்னர் தகுதி வாய்ந்த மூன்று பெரியார்கள் அவரின் இருப்பிடம் சென்றார்கள். இவர்கள் அங்கு ஐந்து மணி நேரம் வழி பார்த்த பின்னர் ,வர்களுக்கு சமூகம் உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது. கடைசியாக தானவி ரஸூல், இந்தத் தனது ரஸூலுத்துவத் தாவாவை (தூதுத்துவ வாதத்தை) மறுக்கவோ அது விஷயமாக பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவோ மறுத்துவிட்டார்.

فَاِذْلَمْ يَاْتُوا بِالشُّهَدَاءِ فَاُوْلٰئِكَ عِنْدَ اللهِ هُمُ الْكَاذِبُوْنَ.

'அவர்கள் ஆதாரங்களை ஆஜர்படுத்தவில்லையாயின் அல்லாஹ்விடத்தில் அவர்களே பொய்யர்கள்.'

-அல்-குர்ஆன்4:13

இதுதான் தானவி ஷெய்கு தர்க்க வாதத்தை விட்டும் விரண்டோடும் பதினாறாவது ஓட்டம். உஷார்!உஷார்!உஷார்!

**அந்தரங்கத்தை வெளிப்படுத்துதல்:**

لَيْسَ الْبِرَّاَنْ تُوَلُّوا وُجُوْهَكُمْ—اِلٰى آخِرِهٖ

'நன்மையாவது உதயகிரிப் பக்கமோ, அஸ்தகிரிப் பக்கமோ நீங்கள் முகம் நோக்குவதல்ல. எனினும் யதார்த்தமான நன்மையாவது அல்லாஹ்வைக் கொண்டும், கியாமத்து நாளைக் கொண்டும், மலாயிக்கத்துகளைக் கொண்டும், வேதங்களைக் கொண்டும், நபிமார்களைக் கொண்டும் ஈமான் கொள்வதாகும்.'

-அல்-குர்ஆன்2:177

அந்த ஜனங்கள் முதன் முதலாக அல்லாஹ்வின் பக்கம் பொய்யையும், வார்த்தைப் பாட்டிற்கு மாறு செய்வதையும் சுமத்தினார்கள்.1

ہم نہیں مانتے کہ اللہ کا جھوٹ بولنا محال ہے

1'அல்லாஹுத் தஆலா பொய் சொல்வது அசம்பாவிதம் என்பதை நாம் ஒப்புக் கொள்ள மாட்டோம்.' மௌலவி இஸ்மாயில் திஹ்லவியின் '**ஏக்றோஸி**' என்ற நூலின் பக். 145

وَمَنْ أَظْلَمُ مِمَّنِ افْتَرَىٰ عَلَى اللهِ الْكَذِبَ وَهُوَ يُدْعَىٰ إِلَى الْإِسْلَامِ ۚ وَاللهُ لَا يَهْدِي الْقَوْمَ الظَّالِمِينَ

'இஸ்லாமளவில் அழைக்கப்பட்டுக் கொண்டிருக்க அவர்கள் அல்லாஹ்வின் பேரிலேயே பொய்யை இட்டுக் கட்டினார்களே அவர்களை விடப் பெரும் அநியாயக்காரர் வேறு எவருமுண்டோ? அல்லாஹ் அநியாயக்காரர்களுக்கு நேர்வழி காட்டமாட்டான்.' -அல்-குர்ஆன் 61:7

பின்னர், அவர்கள் சத்தியத்தூதர் நபி நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான (இல்முல் கைபு) சங்கதிகளை அறிவதை மறுதளித்தார்கள். அந்த

மறைவான சங்கதிகளில் தான் கியாமத்துடையவும், மலாயிகத்துமார்களுடையவும் சங்கதிகளும் உள்ளன.[1]

மேலும், அவர்கள் குர்ஆன் ஷரீபின் வசனங்களுக்குத் தங்கள் மனம் போனவாறு அர்த்தங்கள் வைக்கிறார்கள். எம்பெருமானார் நபிய்யுல் உம்மிய்யு (ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எங்கள் மாதா, பிதா இருவரும் காணிக்கை)

یہ عقیدہ رکھنا کہ آپ کو (یعنی نبی کریم صلی اللہ
علیہ وسلم کو) علم غیب تھا صریح شرک ہے فقط۔
فتاوی رشیدیہ حصہ ۲۔ ص ۱۰۔

[1]றஷீது அஹ்மது கொங்கோஹீயின் பதாவா றஷீதிய்யா 2வது பாகத்தின் 10வது பக்கத்தில் சொல்கிறார்: 'நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான சங்கதிகளை அறிவார்களென்று நம்புவது சுத்தமான ஷிர்க்காகும்.'

அவர்கள் பேரில் போர் தொடுத்தார்கள். அதாவது (அல்லாஹ்தான் காப்பாற்ற வேண்டும்) நபி ஸல்லல்லா{ஹ அலைஹி; வஸல்லம் அவர்களின் அறிவை இபுலீஸுடைய அறிவை விடக்குறைவானது என்று முடிவு கட்டினார்கள்.[1]

الحاصل غور کرنا چاہئے کہ شیطان وملک الموت کا
حال دیکھ کر علم محیط زمین کا فخر عالم کو خلاف
نصوص قطعیہ کے بلادلیل محض قیاس فاسدہ سے
ثابت کرنا شرک نہیں تو کونسا ایمان کا حصہ ہے
شیطان وملک الموت کو یہ وسعت نص سے ثابت ہوئی
فخر عالم کی وسعت علم کی کونسی نص قطعی ہے
جس سے تمام نصوص کو رد کر کے ایک شرک ثابت
کرنا ہے ۔ براہین قاطعہ مصنفہ خلیل احمد انبٹی
مصدقہ رشید احمد گنگوہی ۔ ص ۵۱۔

[1]கலீல் அஹ்மது, கொங்கோஹியால் சரி காணபப்பட்ட '**பறாஹீனே காதிஆ**' என்னும் நூலின் 51வது பக்கத்தில் சொல்லுகிறார்:- முடிவாக அவசியம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஷெய்த்தான், மலக்குல் மவுத்து இருவருடைய நிலைமைகளையும் பார்த்து விட்டு, சரியான ஆதாரங்களுக்கு விரோதமாக தவறான, வெறும் கற்பனைக் கணிப்பைக் கொண்டு மட்டும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பூமி முழுவதையும் அறியக் கூடிய அறிவு உண்டு என்பதாக ஸ்தாபிப்பதானது ஷிர்க்கல்லாமல் அது ஈமானின் எந்தப்பாகத்தைச் சார்ந்ததாகும்? ஷைத்தானுக்கும் மலக்குல் மவுத்துக்கும் ,ந்த விசாலமான அறிவு உண்டு என சரியான ஆதாரத்தைக் கொண்டு ருசுவாகி (உறுதி) இருக்கிறது. நபி நாயகத்தின் விசால அறிவு பற்றி சரியான ஆதாரம் என்ன இருக்கிறது? ஆகவே, இதனால் (ரஸூலுல்லாஹ்வுக்கு பூமி பூராவும் அறியக்கூடிய அறிவு இருக்கிறதென்று சொல்வதானால்) எல்லா ஆதாரங்களையும் மறுத்து விட்டு ஒரு ஷிர்க்கை ஸ்தாபிக்க வேண்டியதாகிறது'.

یہ ہر روز اعادئہ ولادت کا مثل ہنود کہ سانگ
کھنیا کی ولادت ہر سال کرتے ہیں بلکہ یہ لوگ
اس قوم سے بڑھکر ہوے وہ تو تاریخ معین پر
کرتے ہیں ان کے یہاں کوئی قیدھی نہیں جب
چاھے یہ خرافات فرضی بناتے ہیں۔
براہین قاطعہ۔ صہ ١٤٨۔

1 பறாஹீனே காத்திஆவின் 148வது பக்கத்தில் சொல்கிறார்: ,ப்படி ஒவ்வொரு நாளும் (நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம்) பிறந்த சேதியை (மவுலிது ஷரீபை) ஓதி வருவது ஹிந்துக்களில் ஸாங்கு கன்யா பிறப்புக் கொண்டாட்டத்திற்கு ஒப்பாகிறது.

ஹழ்ரத் நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி; வஸல்லம் அவர்களுடைய மவுலிது, திருச் சரித்திரச் சிறப்பை (மீலாதுந் நபி மஜ்லிசுகள் நடத்திக்) கூறுவதை (வட நாட்டில் முஸ்லிமல்லாதார்கள் கொண்டாடும்) கன்யா பிறப்பு என்ற பண்டிகைக்கு ஒப்பிட்டும்), அவ்வாறு (மீலாது, மவுலிது வைபவங்களை) நடத்துவது ஹறாம் - விலக்கப்பட்ட தகாத காரியம் என்றும் அந்தக் கூட்டத்தார்கள் சொன்னார்கள்.1

மேலும், அந்தக் கூட்டத்தார்கள் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைய சமூகத்தை ஜியாரத்துச் செய்வதற்காக மதீனா முனவ்வராவுக்குப் போவதும் கூடாது என்றார்கள்.1

இன்னும் அவர்கள் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான விஷயங்களை அறிந்திருக்கும் அறிவை சிறுபிள்ளை, பைத்தியக்காரருடைய அறிவுக்கும், மிருகங்களுடைய அறிவுக்கும் ஒப்பிட்டுக் கூறினார்கள்.2

அவர்களோ, வருஷா வருஷம் தான் செய்கிறார்கள். இவர்களோ அவர்களை விட மேலே போய்விட்டார்கள். அவர்களோ ஒரு குறிப்பான நாளில் தான் செய்கிறார்கள். இவர்களோ ஒருவகைக் கட்டுப்பாடுமின்றி விரும்பிய சமயமெல்லாம் இந்தக் கற்பனையான வீண் வேலையை செய்கிறார்கள்.

١ آنحضرت صلی اللہ علیہ وسلم کے روضہ مطہرہ کی
فقط زیارت کو سفر کرنا شرك ھے۔
تقویت ایمان ملخصا۔ صہ ١٠-٤٠۔

1 இஸ்மாயீல் திஹ்லவியின் தக்வியத்துல் ஈமான் என்ற நூலின் 10வது, 40வது பக்கங்களிலுள்ள வாசகத்தின் சாராம்சம்:- 'ரஸூல் ஸல்லல்லா{ஹ அலைஹி; வஸல்லம் அவர்களின் பரிசுத்த ரவுளாஷரீபை ஜியாரத்துச் செய்வதற்காக மட்டும் போவது ஷிர்க்காகும்'.

پھر یہ کہ آپ کی ذات مقدسہ پر علم غیب کا حکم
کیا جانا اگر بقول زید صحیح ہو تو دریافت طلب
یہ امر ھے کہ اس غیب سے مراد بعض ھے یا کل۔

அந்தக் கூட்டத்தார்கள் ஹழ்ரத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முபாரக்கான ஜனன தின (மீலாது ஷரீபு) வைபவம் பற்றி சந்தோஷம் கொண்டாடுவதை வழிகேடான காரியம் என்று குறிப்பிட்டு எழுதினார்கள்.3

اگر بعض علوم غیبیہ مراد ھے تو اس میں حضور
کی کیا تخصیص ھے ایسا علم غیب تو زید وعمرو
بلکہ ہر صبی و مجنون بلکہ جمیع حیوانات وبہائم
کے لئے بھی حاصل ھے۔ حفظ ایمان۔ ص ۸۔

2 மௌலவி அஷ்றபு அலி தானவி, தனது ஹிப்ளுல் ஈமான் என்ற நூலின் 8வது பக்கத்தில் சொல்கிறார்:- 'நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்று ஜைது என்ற நபர் கூறும் அக் கூற்றை சரி என்று வைத்துக் கொண்டால் அவரிடம் நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி; வஸல்லம் அவர்கள் மறைவான சங்கதிகள் பூராவையும் அறிவார்களா, அல்லது சிலவற்றை அறிவார்களா என்று கேட்க வேண்டும். சிலவற்றை அறிவார்கள் என்பது அவருடைய கருத்தானால் அதைக் கொண்டு நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு என்ன விஷேச மகிமை இருக்கிறது? (நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்கள் அறிந்திருப்பது போன்ற) அம்மாதிரி அறிவை ஜைது, அம்ரு போன்ற சாதாரண மனிதனும் தான், ஒவ்வொரு மதளைக் குழந்தைகளும் தான், பைத்தியக்காரர்களும் தான் பெற்றிருக்கிறார்கள். ஏன் - அதுபோன்ற அறிவை எல்லா மிருகங்களும் கூடத்தான் பெற்றிருக்கின்றன.

فتاوی رشیدیہ حصہ دوم۔ ص ۸۳۔ سوال انعقاد
مجلس میلاد بدون قیام بروایت صحیح درست ھے

இன்னமும் இவைபோன்ற பல தவறான உளறுதல்களை உளறினார்கள். முடிவாக ஹழரத் காத்தமுன்னபிய்யீன் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களைப் போல வேறு ரஸூல் இருந்தார்கள். மேலும் வரவும் கூடும் என்றும் குறிப்பிட்டார்கள். இவ்வாறு குறிப்பிடுவது அவர்களுடைய பீடிகை ஏற்பாடாகும். ஏனெனி;ல், ரஸூலுத்துவத்தின் ஆதி அந்தத்தின் பால் மக்களுக்கு மோசமான, தீய கொள்கை (நம்பிக்கை)யை முதன் முதலாக உண்டு பண்ணிவிட்டால் அதற்கப்பால் தானவி ஷெய்கு ரஸூல் என்பதை ஜனங்கள் ,லேசாக ஒப்புக்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதுதான்.

یا نہیں الجواب انعقاد مولود ہر حال ناجائز ہے
تداعی امر مندوب کے واسطے منع فقط ۔

3 பதாவா றஷீதிய்யா இரண்டாம் பாகம் 83வது பக்கத்தில், அதன் ஆசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்:-

**வினா** : (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்த செய்தி வரும்போது மரியாதைக்காக) எழுந்து நிற்காமலும், சரியான ரிவாயத்துப்படியுள்ள சரித்திரத்தை ஓதியும், மீலாது மவுலிது ஷரீபு மஜ்லிஸ் நடத்துவது ஆகுமா, ஆகாதா?

**விடை** : எந்த விதத்திலும் மீலாது மவுலிது ஷரீபு நடத்துவது கூடாது. இ,்.து, ஸுன்னத்தான காரியமென நம்பும்படி வைக்கக் காரணமானதனால் விலக்கப்பட்டதாகும்.

அப்துஷ் ஷகூர் காகூறவியால் எழுதப்பட்டு, அஷ்றபு அலி தானவியால் சரிகாணப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்ட **'ஸைபு யமானி'** எனும் நூலில் வரையப்பட்டுள்ளது.

افعال مندرجہ فی السوال (میلاد شریف و قیام میلاد
شریف) کا بدعت ہونا اظہر من الشمس و ابین من
الامس ہوچکا ہے۔ (سیف یمانی)

'வினாவில் காணப்பட்ட மீலாது-மவுலிது ஷரீபு, அதில் எழும்பி நிற்பது முதலிய ,ச்செயல்களெல்லாம் பிதுஅத்தான கருமமென்பது சூரியனை விடப்பிரகாசமாகவும் பட்டப்பகல் போல துலாம்பரமாகவும் தெளிவாகிவிட்டது.'

சகோதரர்களே! தானவி சாஹிபின் யோக்கியதையை பின்வரும் அவருடைய தபாலிலுள்ள வாசகத்திலிருந்து கிரகித்துக் கொள்ளுங்கள். தான் பித்அத்து - ஆகாது - விலக்கப்பட்டது என்று சொல்வதையே துன்யாவுடைய பிரயோசனத்துக்காகச் செய்து கொள்கிறார்.

'றஷீது அஹ்மதுவின் தபால்' என்ற நூலில் தானவி சாஹிபுடைய தபால் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில், தானவி சாஹிபு கான்பூரிலிருக்கும் போது மீலாது-மவுலிது-மஜ்லிஸில் கலந்து கொள்வதையும் மீலாது மஜ்லிஸ் நடத்தி வருவதையும் பற்றிக் கேள்விப்பட்டு, அவருக்கு மௌலவி றஷீது அஹ்மது அது பற்றி எழுதிக் கேட்டிருந்த கடிதத்திற்கு தானவி சாஹிபு எழுதிய பதில் வருமாறு:-

'நான் நன்கு கவனித்து ,ங்கு (கான்பூரில்) உள்ள சூழ்நிலைகளை நோட்டமிட்டுப் பார்த்ததில், இங்கு மீலாது மவுலிது-மஜ்லிஸில் கலந்து கொள்ளாமல் நீங்கி இருந்து காலங்கழிப்பது சாத்தியமில்லை. ஏனெனில், (இங்குள்ளவர்கள்) அது பற்றி சற்றாகிலும் நான் ஆட்சேபணை செய்வதைத் தெரிந்தால் (நம்மை) வஹ்ஹாபி என்று அம்பலப்படுத்தி விடுவார்கள். அத்தோடு

பழிப்பும், பங்கமும் ஏற்பட்டுவிடும். மேலும் அம் மஜ்லிஸ்களில் நான் கலந்துகொள்வதெல்லாம் அந்த ஜனங்களுக்கு நேர்வழி கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான். நாம் செய்வது ஒரு மக்ரூஹ் (பழிக்கப்பட்டுள்ள) காரியமாயிருந்தாலும் அதன் மூலம் மற்ற முஸ்லீம்கள் பர்ளு, வாஜிபுகளைப் பேணக்கூடிய தன்மை ஏற்படுமானால், அதை அல்லாஹ் மன்னிப்பதை ஆதரவு வைக்கிறேன். நம்முடைய நிலைமை, எவ்வாறும் இங்கு கான்பூரில் மீலாது-மவுலிது-மஜ்லிஸில் கலந்து கொள்ளாமலிருப்பது அசாத்தியம் என்பதாகவே காண்கிறேன். நமக்கோ இங்கு தங்கி இருப்பது பெரிதும் விருப்பமாக இருக்கிறது. ஏனெனில் இங்கு துனியா உடைய பிரயோசனமும் கிடைக்கிறது. அத்துடன் மத்ரஸாவிலிருந்து சம்பளமும் கிடைக்கிறது.'

يُرِيدُونَ لِيُطْفِئُوا نُورَ اللهِ بِأَفْوَاهِهِمْ وَاللهُ مُتِمُّ نُورِهِ وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ

'அவர்கள் அல்லாஹ்வின் ஜோதியை தங்களுடைய வாய்களைக் கொண்டு ஊதியணைத்து விட நாடுகிறார்கள். (அது முடியாத காரியம்) அல்லாஹ் அவனுடைய ஜோதியைப் பரிபூரணமாக்கி வைப்பவன். மறுதளிப்பவர்கள் (அதனால்) பொருத்தக் குறைவானாலும் சரியே.' -அல்-குர்ஆன் 61:8

**பத்வா - மார்க்கத்தீர்ப்பு:**

1. அல்லாஹு (ஜல்ல ஷானுஹு வதஆலா) உடைய விஷயத்திலும், ஹழரத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களுடைய விஷயத்திலும் ,வ்வாறாக ஒழுங்கீனமாக நடந்தால் அம்மாதிரி நடப்பவர்களுடைய தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத்து எல்லாம் பழுதாகிவிடும். இது பற்றிய விபரம் வேண்டுமானால் ஸூறா ஹுஜ்றாத்தின் ஆரம்ப வசனங்களைப் பாருங்கள்.1

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُقَدِّمُوا بَيْنَ يَدَيِ اللهِ وَرَسُولِهِ وَاتَّقُوا اللهَ سَمِيعٌ عَلِيمٌ. يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا

2. இமாம் அபுயூசுபு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்களின் கிதாபுல் கறஜ் என்ற நூலில் சொல்கிறார்கள்.

ايما رجل مسلم سب رسول الله صلى الله عليه وسلم
او كذبه او عابه او تنقصه فقد كفر بالله تعالى و بانت
منه امرأته

எந்த முஸ்லிமாவது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அவமரியாதைப் படுத்தி ஏசுவானேயானால், அல்லது அவர்களைப் பொய்யாக்குவானேயானால், அல்லது அவர்களது விஷயத்தில் குறை கூறுவானேயானால், அல்லது அவர்களது பரிசுத்தச் சமூகத்தின் மேலாம்பரமான தகுதியை கண்ணியக் குறைவாக மதிப்பானேயானால் அவன் நிச்சயமாக அல்லாஹ்வைக் கொண்டு

(மறுதளித்த)காபிராகிவிட்டான். அவனுடைய மனைவி அவனுடனுள்ள நிக்காஹ் சம்பந்தத்தை விட்டும் நீங்கிவிடுவாள்.'

3. درالمختار(துர்ருல் முக்தார்) என்ற கிரந்தத்தில் சொல்லப்படுகிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَرْفَعُوا أَصْوَاتَكُمْ فَوْقَ صَوْتِ النَّبِيِّ وَلَا تَجْهَرُوا لَهُ بِالْقَوْلِ كَجَهْرِ بَعْضِكُمْ لِبَعْضٍ أَن تَحْبَطَ أَعْمَالُكُمْ وَأَنتُمْ لَا تَشْعُرُونَ

ஈமான் கொண்ட விசுவாசிகளே!

நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய ரஸூலுக்கும் முன்பில்(யாதொரு சொல்லைக் கொண்டும் செயலைக் கொண்டும்) முந்த வேண்டாம். அல்லாஹ்வை அஞ்சி நடவுங்கள். நிச்சயமாக அல்லாஹ்(உங்கள் சொற்களை)கேட்பவனாகவும் (செயல்களை அறிந்தவனுமாக இருக்கிறான். ஈமான் கொண்ட விசுவாசிகளே! நபியவர்களுடைய (வார்த்தை) தொனிக்கு மேலே உங்களுடைய தொனியை உயர்த்த வேண்டாம். உங்களுக்குள் ஒருவருக்கொருவர் (சர்வ சாதாரணமாக) உரத்து இரைந்து பேசுவது போல நபியவர்களுடனும் சப்தமிட்டுப் பேசாதீர்கள். (நபியவர்களுடன் மிகவும் ஒழுக்கத்துடன் அதபாக இருக்க வேண்டும். அவ்வாறு ஒழுக்கம் பேணாமல் ஒழுங்கீனமாக நடப்பீர்களேயானால்) நீங்கள் செய்த நல்லமல்கள் (பயனற்று)அழிந்து போய்விடும். ஆனால், (அவ்வாறு உங்கள் அமல்கள் அழிந்துபோகும் நிலைமையை) நீங்கள் அறியமாட்டீர்கள்.

-அல்-குர்ஆன் 49:1

(கருத்து: நீங்கள் அல்லாஹ்,ரஸூல் உடைய விஷயத்தில் அதபுக் குறைவாக நடப்பதன் மூலம் உங்கள் அமல்கள் நெருப்பிலிட்ட மெழுகு போல் அழிந்துவிடும்.)

الكافر بسب نبي من الانبياء لا تقبل توبته مطلقا
ومن شك فى عذابه وكفره كفر .

'நபிமார்களில் எந்த ஒரு நபியையாவது ஏசியதனால் காபிராகி விட்டவனுடைய தவ்பாவை அங்கீகரிக்கப் படமாட்டாது. அத்தகையவன் காபிர் என்பதிலும், அத்தகையவனுக்கு (அதாபு) நரக வேதனை கிடைக்கும் என்பதிலும் சந்தேகிக்கிறவனும் காபிராகிவிடுவான்.'

4. ஷரஹு முவாபிக்கில் வருவதாக ஷரஹு பிக்{ஹல் அக்பர் கிரந்தத்தில் காணப்படுகிறது.:-

கிபுலாவை நோக்கித் தொழுகிறவர்(அஹ்லே கிபுலாக்)களை காபிர்கள் என்று சொல்வது கூடாது. ஆனால் அவர்கள் மார்க்கத்தில் பிரசித்தமான முக்கிய

www.sufimanzil.org

விஷயங்களையோ,அல்லது ஸஹாபாக்கள், இமாம்கள் யாவர்களாலும் ஏகோபித்து ஒப்பிக் கொள்ளப்பட்ட விஷயங்களையோ மறுத்தாலேயொழிய, அவற்றை மறுத்தால் அவர்களை காபிர்கள் என்று சொல்லலாம்.

முஹம்மது முஸ்தபா ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் இஷ்கு (ஆசை) எனும் இன்ப அமுதத்தை அருந்திய அன்பர்களே! சிந்தனை செய்து பாருங்கள்!

முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் என்று சொல்வதும், அறிவதும் நமது தீனுல் ,ஸ்லாம் மார்க்கத்தில் பிரசித்தமாக அறியப்பட்டுள்ள முக்கியமான கடமைகளில் உள்ளதுதானா, அல்லவா?

எனவே, எவரொருவர் மேலே கூறப்பட்ட கெட்ட கொள்கையை, அதாவது: அஷ்றபு அலி ரஸூலுல்லாஹ் (அஷ்றபு அலி அல்லாஹ்வின் தூதர்) என்று சொல்வதை ,றுமாப்புக்கொண்டு இத்திபாஉ ஸுன்னத்து (மார்க்கத்தைப் பின்பற்றுதல்) என்று சொல்லிப் பொருத்தமற்ற சமாதானம் சொல்கிறாரோ அவர் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் ரஸூலுத்துவத்தை மறுத்தவராகவும், நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களை கண்ணியக் குறைவு செய்தவராகவும், ரஸூலுத்துவத்தில் (தனக்கு) கூட்டுப் பங்கு வைத்தவராகவும் ஆவாரா, இல்லையா?

**இறுதித் தீர்ப்பு:**

குர்ஆனுல் ஹமீதின் தீர்ப்பு: (,ப்படிப்பட்ட) ,வனுடைய ஒரு வணக்கமும் கபூல் செய்யப்பட மாட்டாது. (ஏற்றுக் கொள்ளப்படாமல்) அவையத்தனையும் வீணாகி விட்டது.

இமாம் அபூயூசுபு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்கிறார்கள்: இத்தகையவர் காபிராகி விட்டார். இவரின் மனைவி (தலாக்கு பாயினாவாகி) நிக்காஹ்வை விட்டும் பிரிந்து விட்டாள்.

துர்ருல் முக்தார் ஆசிரியர் சொல்கிறார்கள்:-

'இவருடைய தவ்பா ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. மேலும், இவர் காபிர் என்பதில் சந்தேகம் கொள்பவனும் காபிராகிவிடுவான்'.

முவாபிகு என்னும் கிரந்தகர்த்தா கூறுகிறார்கள்: இவர் கிபுலாவை முன்னோக்கி வணங்குவதானது இவர் காபிராகி விடுவதை விட்டும், இவர் காபிர் என்று மார்க்க அறிஞர்கள் மார்க்கத் தீர்ப்பு (பத்வா) கொடுப்பதை விட்டும் தப்பித்துக் கொள்ளச் செய்து விடாது.'

**எச்சரிக்கை:**

சிறப்பும், வலுப்பமும் உடைய ஏக நாயனின் (ஜமால்) பேரழகில் மையல் கொண்ட நல்லடியார்களே! அஹ்மது நபி ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் கல்யாண சம்பூரண, சற்குணத்தின் பேரில் ஆஷிக்கான பேரன்பர்களே!

நீங்கள், ஸெய்யிதுல் அப்ரார் (நல்லடியார்களுக்கெல்லாம் நாயகமானவர்களான) திருநபி ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களுடைய திவ்விய தரிசனத்தின் பேரில் ஆசை கொண்டவர்களாக இருப்பீர்களேயானால்-ஹவ்ளுல் கவ்தரின் பானத்தைப் பருகத் தேட்டமுடையவர்களாக இருப்பீர்களேயானால் - ஷபாஅத்துல் குப்றாவை ஆதரவு வைத்தவர்களாக இருப்பீர்களேயானால் - ஹக்குத்த ஆலாவின் தீதாறு (காட்சி) பேரி;ல் அபிலாஷையுடையவர்களாக இருப்பீர்களேயானால் - உங்களுடைய உயிருக்குயிரான ஈமானைப் பறித்துச் செல்ல சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் கள்ளக் கூட்டத்தாரான இத்தகைய (மௌலவி அஷ்றபு அலி தானவியையும் அவரைச் சேர்ந்தவர்களையும் போன்ற) வழிப்பறிக் கள்வர்களான போலி ஷெய்குமார்;ளை விட்டும் ஜாக்கிரதையாக (அவர்கள் வலையில் விழாமல்) இருந்து தப்பித்துக்கொள்ளுங்கள்.

فهل انتم منتهون

'நீங்கள் (அவ்வாறு) விலகி இருப்பவர்கள் தானே?'

-அல்-குர்ஆன் 5:91

மேலே குறிப்பிட்ட வழிகெட்ட கூட்டத்தார்களுடன் சேர்ந்தோ, அல்லது அவர்களுக்கு ஆதரவு கொடுத்தோ, அல்லது அவர்களின் கூற்றுகளுக்கு தலை சாய்த்தோ நடந்து இருந்த காரியங்களுக்காக தவுபாச் செய்யுங்கள். மேலும் யாராகிலும் உண்மையான முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஆஷிக்கான ஒரு ஷெய்கை உங்களுக்கு குருவாகவும், வழிகாட்டியாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். (மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட வழிகெட்ட கூட்டத்தாரின் சகவாசம் வேண்டவே வேண்டாம்).

وما علينا الا البلاغ المبين

'தெளிவுபட எடுத்துக் கூறி விஷயத்தை எத்தச் செய்வதுவேயல்லாமல் எம்மீது வேறு கடமையில்லை.' -அல்-குர்ஆன் 36:17

ولاحول ولاقوة الا بالله العلى العظيم وماتوفيقى الا بالله وهو ولي التوفيق

'எத்தகைய திரும்புதலும், சக்தியும் வலுப்பமும் உயர்த்தியுமுடைய அல்லாஹ்வைக் கொண்டே அல்லாது இல்லை. நாம் நேர் வழி பெறுவதும், அதற்கு உதவி கிடைப்பதும்

அல்லாஹ்வைக் கொண்டே அல்லாது கிடையாது. அவனே நேர்வழியின் பால் உறுதுணை புரியக்கூடிய காரியகர்த்தன்.'

(ஒப்பம்) **முஹம்மதுஅப்துல் அலீம் ஸித்தீக்கிய்யில்காதிரிய்யி,**

ஜமாதுல் அவ்வல் 10 நம்பர் 236,மஹல்லா மஷாயிகான்,

ஹிஜ்ரி 1336 மீரட்டுமாநகர்.

**குறிப்பு:**

அல்லாஹ்வையும், ரஸூலையும் உவந்த உண்மை முஸ்லிம் சகோதரர்களே! சங்கை மிகுந்த மௌலானா மௌலவி மீரட், முஹம்மது அப்துல் அலீம் ஸித்தீக்கி காதிரி அவர்களின் பத்வாவைப் படித்து உண்மையை உங்கள் இருதய பூர்வமாக நன்கு தெரிந்திருப்பீர்கள். அவர்கள் அதில் பிரஸ்தாபித்த ஷுஹஸாமுல் ஹறமைன் என்ற மக்கா மதீனாவிலிருந்து வந்த பத்வா கிரந்தத்திலும் கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்றபு அலிதானவி, றஷீது அஹ்மது கொங்கோஹி முதலியவர்களெல்லாம் தங்கள் தங்களுடைய நூற்களில் பற்பல கெட்ட குப்ரிய்யத்தான கொள்கைகளை எழுதியிருந்ததனால் இவர்கள் காபிர்கள் என்றும், இவர்களை காபிர்கள் என்பதில் சந்தேகித்தவனும் கூட காபிர் என்றும் பகிரங்கப்படுத்தப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மேலே சொல்லப்பட்டவர்கள் தான், டில்லி தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் உடைய ஷெய்குமார்களும், உஸ்தாதுமார்களுமாவார்கள். இவர்களைத்தான் அவர் குத்புகள் என்றும், முஜத்திதுகள் என்றும் சொல்கிறார். இவர்களுடைய நேசத்திலேயே தான் மௌலவி இல்யாஸ் மூழ்கிக் கிடந்தார். இவர்களுடைய இத்தகைய கொள்கைகளையும், போதனைகளையும் தான் மௌலவி இல்யாஸ் தப்லீகு (மார்க்கப்பிரச்சாரம்) என்ற திரை மறைவுக்குள் தப்லீகுல் அகாயிதில் வஹ்ஹாபிய்யா வஹ்ஹாபிக் கொள்கையை பிரச்சாரம் செய்கிறார்.

ஸுன்னத் வல் ஜமாஅத்துச் சகோதரர்களே!

இத்தகைய இல்யாஸிக் கூட்டத்தாரைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். இல்யாஸித் தப்லீகுக் கூட்டத்தில் சேராதீர்கள். தப்லீகெ ஸதாகத்து உண்மையான ஸுன்னத் வல் ஜமாஅத்துக் கொள்கையைப் பிரச்சாரம் புரியுங்கள். மதீனா முனவ்வராவை மர்க்கஸாகக் கொண்டு நாயகம் ஸல்லல்லா{ஹ அலைஹி வஸல்லம் அவர்களின் உண்மைப் போதனைகளைப் பரப்புவோம். டில்லியை மர்க்கஸாகக் கொண்டுள்ள தப்லீகுல் இல்யாஸிய்யில் வஹ்ஹாபிய்யி உடைய தொடர்பு நமக்கு வேண்டாம். அந்த டில்லி தப்லீகு ஜமாஅத்தின் அதிபர் இல்யாஸுக்கும், வஹ்ஹாபிய்யக் கொள்கையுடைய தலைவர்களுக்கும் எத்தகைய சம்பந்தம் உண்டு என்பதை மௌலவி இல்யாஸுடைய தீனி த:வத்து, மல்பூளாது, மக்தூபாத்து என்ற நூற்களிலிருந்து அத்தாட்சிகள் காட்டுகிறேன். கவனித்துப் பாருங்கள்.

فرمایا حضرت رشید احمد گنگوہی اس دور کے
قطب ارشاد اور مجدد تھے۔

'ஹழரத்து றஷீது அஹ்மது கொங்கோஹி ,க்காலத்தில் நேர்வழி காட்டும் குத்பாகவும், முஜத்திதாகவும் ,இருக்குமென (மௌலவி இல்யாஸ்) சொன்னார்கள்.' -மல்பூளாத்:பக்கம் 114.

یہ حضرات (یعنی مولانا گنگوہی کے خلفا شاہ
عبد الرحیم صاحب رائے پوری مولانا محمود حسن
دیوبندی مولانا اشرف علی تھانوی) میرے جسم
وجان میں بسے ہوئے تھے۔

'இந்த மகான்கள், அதாவது மௌலானா கொங்கோஹி அவர்களின் கலீபாக்களான ஷாஹ் அப்துர் ரஹீம் ராயப்பூரி, மஹ்மூது ஹஸன் தேவுபந்தி, மௌலானா அஷ்றபு அலி தானவி ஆகியவர்கள், என்னுடைய உயிரிலும் உடலிலும் குடி கொண்டிருக்கிறார்கள்.' தீனிதஃவத்:49

ایک بار فرمایا حضرت تھانوی رحمۃ اللہ علیہ نے بہت
بڑا کام کیا ہے بس میرا دل چاہتا ہے کہ تعلیم تو
ان کی ہو اور طریقہ تبلیغ میرا ہو کہ اسطرح ان کی
تعلیم عام ہو جائے گی۔

'ஒரு சமயம், (மௌலவி இல்யாஸ்) அவர்கள் சொன்னார்கள்: ஹழரத்து தானவி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பெரும் வேலையைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, என் மனம் விரும்புகிறது. போதனை அவர்களுடையதாகவும், தப்லீகின் முறை என்னுடையதாகவும் இருக்க வேண்டும் என்று. இந்த விதமாகவே அவர்களுடைய போதனை (எங்கும் பிரஸ்தாபமாக வேண்டும்.' மல்பூளாத்:பக்கம்47.

حضرت تھانوی رح سے منتفع ہونے کے لئے
ضروری ہے کہ ان کی محبت ہو اور ان کے آدمیوں سے
اور ان کی کتابوں کے مطالعہ سے منتفع ہوا جاوے
ان کی کتابوں کے مطالعہ سے علم آوے اور ان کے
آدمیوں سے عمل۔

'ஹழரத் தானவி ரஹ் அவர்களைக் கொண்டு பிரயோசனம் பெறுவதற்கு அவர்களையும், அவர்களுடைய ஆட்களையும் நேசிக்க வேண்டும். அவர்களுடைய கிதாபுக்களைக் கொண்டு பிரயோசனம் அடைய வேண்டும். அவர்களுடைய கிதாபுகளைப் பார்ப்பதனால் அறிவு உண்டாகும். அவர்களுடைய ஆட்களினால் அமல் உண்டாகும்.'

www.sufimanzil.org

மக்த்தூபாத்து: பக்கம் 138.

அஷ்ரபு அலி தானவி உடைய கொள்கைகளுக்கும், மௌலவி இல்யாஸ் உடைய கொள்கைகளுக்கும், தங்களுக்கும் சம்பந்தம் ,ல்லை என்றோ, அல்லது அவருடைய மேலே குறிப்பிட்ட நூற்களுக்கும், தங்களுக்கும் சம்பந்தம் கிடையாது என்றோ, அல்லது மேலே குறிப்பிட்ட நூற்களில் உள்ள விஷயங்களை இல்யாஸ் சொன்னதோ, எழுதியதோ கிடையாது என்றோ நாளது திகதி வரை மௌலவி இல்யாஸின் குமாரரான மௌலானா யூசுபுவோ, அல்லது டில்லியில் உள்ள தப்லீகு இல்யாஸீ உடைய தலைமைக் கர்த்தாக்களில் எவருமோ மறுத்தது கிடையாது என்பதையும் சகோதரர்கள் கவனிக்கவும். ஸுன்னத் வல் ஜமாஅத்துக் கொள்கைக்கு மாறாக உள்ள விஷமத்தனமான விஷயங்களைக் கொண்டுள்ள மேலே குறிப்பிட்ட கிதாபுகளை, அவர்களே சம்பந்தப்பட்டு வினியோகமும் செய்கிறார்கள். அந்த விஷயங்களைச் சரி காணுகிறார்கள். ஆகவே, அத்தகைய வஹ்ஹாபிய்யத்தான கூட்டத்தை விட்டும் விலகி இருப்போமாக!

காதிமுல் கௌம்,

**ஷெய்கு அப்துல் காதிரி ஸூபி ஸித்தீக்கி காதிரி.**

வஸ்ஸலாம்.

*முற்றும்.*

www.sufimanzil.org